# புதிய பெண்களுக்குக்கான கொள்கை வரைவு 2021
# – சேர்க்கப்படவேண்டிய பரிந்துரைகள்

29.03.2022 அன்று, பல்வேறு **பெண்கள் அமைப்புகள்** இணைந்து, தமிழக மகளிர் ஆணையத்துடன், "பெண்களக்குக்கான கொள்கை மற்றும் பட்ஜெட்" பற்றிய கலந்துரையாடலை நடத்தினோம். இந்நிகழ்வில் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளுள் மிக முக்கியமான பரிந்துரைகளை சுருக்கி, அரசின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

| புதிய பெண்களக்குக்கான கொள்கை வரைவு 2021 | பரிந்துரைகள் |
|---|---|
| **1. உயர்நிலை மகளிர் உரிமைக்குழு**<br><br>(High Level Women Empowerment Committee - HLWEC) | **சேர்க்கப்படவேண்டிய உறுப்பினர்கள்:**<br>i. இருபது ஆண்டுகளுக்கு மேலாக அர்ப்பணிப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கும் "**பெண்கள் அமைப்புகளின் தலைவிகள்**"<br>ii. **தமிழ்நாடு மகளிர் ஆணையம்**<br>(தமிழ் கொள்கை வரைவு - பக்கம் 53,54) |
| **2. பாலின பட்ஜெட் /**<br><br>**மகளிருக்கான வரவு செலவு திட்டம்**<br><br>(GENDER BUDGETING) | **விளிம்புநிலையில் இருக்கும் பெண்களுக்கான புதிய மாற்று திட்டங்களை - பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து உருவாக்கவேண்டும்.**<br>இதற்காக பட்ஜெட் உருவாக்குவதற்கு முன்பாக, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை, நிதித்துறையின் கீழ் இருக்கும் 'பாலின வரவு செலவுத் திட்டத் கண்காணிப்புக் குழு' (Gender Budget Cell) மற்றும் மகளிர் ஆணையம் இனைந்து 'விளிம்புநிலையில் இருக்கும் பெண்களின்' கோரிக்கைகளை கலந்து ஆலோசிக்கவேண்டும். [Pre-Budget Gender Discussion]<br>இந்த புதிய திட்டங்களை, மகளிருக்கான வரவு செலவு திட்ட அறிக்கை (Gender Budget Statement), பகுதி இ-ல் பட்டியலிடவேண்டும்.<br>(தமிழ் கொள்கை வரைவு - பக்கம் 55) |
| 3. இக்கொள்கையானது ...<br>**விளிம்பு நிலையில் இருக்கும் பெண்களுக்கு** சிறப்பு கவனத்துடன் செயல்படுத்தப்படும். | சமூக வகைபாடுகளின் பகுப்பாய்வின் (Inter-Sectionality) அடிப்படையில், **2022இல் விளிம்பு நிலையில் இருக்கும் பெண்கள் குறித்த ஆய்வறிக்கை வெளியிட வேண்டும்.**<br><br>(தமிழ் கொள்கை வரைவு - பக்கம் 10,11,21,22,55) |